ஓம்

# திருமந்திர அடிப்படையில் மாணிக்கவாசக சுவாமிகள் அருளிச்செய்த திருவெம்பாவையின் தத்துவ விளக்கங்கள்

எழுதியவர்

## - S. இராமநாதன் -

வெளியீடு
திருமூலர் சங்கம்
இல, 3, ரிச்வே இடம்,
பம்பலப்பிட்டி, கொழும்பு 04.
Tel. 584145

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணிக்கவாசகர் சுவாமிகள் அருளிச்செய்த திருவெம்பாவையின் தத்துவ விளக்கங்கள்

திருவெம்பாவையெனபது எமக்குள் இயங்கும் பரிசுத்த கன்னிப்பெண் ணென பொருள்படும். சைவசமய கொள்கைகளை வகுத்த திருமூலர் வேதப்பொரு ளான ஆத்ம வஸ்துச்சக்கரத்தை ஐந்தெழுத்தாக அகாரம், இகாரம், உகாரம் ஓங்காரம், மகாரமென, பிரித்து அதில் முதலெழுத்தான அகார எழுத்தை இறைவனின் திருப்பாதமென்றும் அதிலிருந்து எழும் ஓசையான உகாரத்தை சக்தி பேதமாக்கியுள்ளார். பின்வரும் திருமந்திரம் விளக்குகின்றது.

1751 "ஆரும் அறியார் அகாரமவனென்று
பாரும் உகாரம் பரந்திட்ட நாயகி
தாரம் இரண்டும் தரணி முழுதுமாய்
மாறி எழுந்திடும் ஓசைய தாயே."

இந்த உண்மையை அறிந்து உணர்ந்தவர்களே சைவநீதியை உணர்ந்த நியமத்தரென்று கீழ்க்காணும் திருமந்திரம் கூறுகின்றது.

555 "ஆதியை வேதத்தின் அப்பொருளாளனை
சோதியை அங்கே சுடுகின்ற அங்கியை
பாதியுள் மன்னும் பராசத்தியோடுடன்
நீதி உணர்ந்தவர் நியமத்தனாமே."

ஒரே பொருளின் ஒரு பாதி ஆணாகவும் மற்றப்பாதி பெண்ணாகவும் நிற்கும் தோற்றத்தை "அர்த்தநாரீஸ்வரர்" என்று நூல்கள் கூறுகின்றன. சிவனும் சக்தியும் ஐந்தெழுத்து சக்கரத்தின் அத்வைதமாய், அகார உகாரமாய், விந்து நாதமாய், சத சத்தியாய் நிற்பது தெளிவாகின்றது.

இதை மேலும் விளக்குகையில் அருணகிரிநாதர் திருப்புகழில் "நாத விந்துக்கள் ஆதி நமோ நமோ" என்று கூறியிருக்கும் உண்மையை அமெரிக்கா விண்வெளி விஞ்ஞானிகள் ஊர்ஜிதப்படுத்தி இருப்பதை (Big Bang Theory) கற்ற வர்கள் அறிவார்கள். விந்துவை (Bindu) மின்சார காந்த அணுசக்தி (Electro - Magnetic- atomic energy) யென்று விஞ்ஞானிகள் விளக்குகின்றனர். அது ஒரு அழியாத நிலையான சக்தியென்றும் (Static Energy) அதன் அமுக்கம் தாங்க முடியாமல் அது வெடித்த காரணத்தால் இப்பிரபஞ்சம் வெளிப்பட்டதாக விஞ்ஞானிகள் அபிப்பிராயப்படுகின்றனர். விந்துவிலிருந்து எழுகின்ற முழக்கத்தை (kinetic Energy) நாதமென்றும் ஞானிகள் கூறியிருக்கின்றார்கள். இந்து மத நூல்கள் விந்துவை ஆண்பாலாக்கி அதை சத் என்றும் ஐந்தெழுத்தின் முதலெழுத்தான அகாரமென்றும் சிவன், இறைவன், ஈசன், அண்ணல், அத்தன், பராபரன், ஆதி பிரானென்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலவாறாக கூறுகின்றது. அதையே மெய்ப்பொருளாகவும் வேதப் பொருளாகவும் மூலத்தொல் பொருளாகவும் திருமந்திரப்பாடல்கள் விளக்குகின்றன. விந்துவிலிருந்து எழுந்த நாதத்தை பெண்பாலாக்கி சத்தி, ஆதிப்பராசத்தி, பராபரை ஐந்தெழுத்தின் உகாரமென்றும், மகாகாளி, மகாலக்சிமி, வடிவாம்பிகை இறைவியென்றும் கூற பலவாறாக்கியுள்ளார்கள்.

விந்துவும் அதிலிருந்து எழும் நாதமும் பிணைந்து ஒரு பொருளாய் ஐந்தெழுத்துச் சக்கரங்களாய் உருவெடுத்து அண்டா அண்டங்களையும் உலகத்தையும் பஞ்ச பூதங்களையும் எல்லையில்லாத வான்வெளியையும் கோடிக்கணக்கான சூரியன்களையும் சந்திரன்களையும் எண்பத்திநாலு நூறாயிரம் விதவிதமான யோனிகளையும் எல்லா வளங்களையும் தோற்றங்களையும் படைத்து நிற்பதை பின்வரும் திருமந்திரங்கள் அழகாக விளக்குகின்றன.

1258 "மேல்வரும் விந்துவும் அவவெழுத்தாய் விடும்
மேல்வரும் நாதமும் ஓங்கும் எழுத்துடன்
மேல்வரும் அப்பதி அவ்வெழுத்தேவரின்
மேல்வரும் சக்கரமாய் வரும் ஞாலமே."

விந்து நாதத்தின் பிணைப்பையே பதியென்றும் ஆதியென்றும் கூறியிருப்பது குறித்து வைத்திருத்தல் வேண்டும். இதையே சைவநீதி விளங்கும் உலகெல்லாமென்று பாடியுள்ளார்கள்.

1259 "ஞாலமதாக விரிந்ததுசக்கரம்
ஞாலம தாய்விடும் விந்துவும் நாதமும்
ஞாலம தாய்விடும் அப்பதி யோசனை
ஞாலமதாக விரிந்தது எழுத்தே."

அப்பதி யோசனை இறைவனின் வியாபகமான பிரபஞ்சத்தின் எல்லையில்லாத நீளம் அகலத்தைக் குறிக்கும்.

1260 "விரிந்த எழுத்தது விந்துவும் நாதமும்
விரிந்த எழுத்தது சக்கரமாக
விரிந்த எழுத்தது மேல் வரும் பூமி
விரிந்த எழுத்தினில் அப்புறம் அப்பே."

உலகத்தையும் பஞ்ச பூதங்களையும் விந்து நாதப்பிணைப்பால் உண்டான சக்கரங்கள் படைத்த முறையைக் கூறுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1261 "அப்பது வாக விரிந்தது சக்கரம்
அப்பினில் அப்புறம் அவ் அனலாய் விடும்
அப்பினில் அப்புறம் மாருதமாய் எழ
அப்பினில் அப்புறம் ஆகாச மாமே."

இந்தச் சக்கரங்கள் எல்லா சீவராசிகளுக்குள்ளும் எமக்குள்ளும் உயிர்களாய் இயங்குகின்றது. திருமூலர் ஐந்தெழுத்தாய் பிரித்த இச்சக்கரத்தை அவரின் சகாவான பதஞ்சலி மாமுனிவர் பஞ்சாட்சர மந்திரமாய் பிரித்து தனது யோகசூர்த்திரமென்னும் நூல்களில் விளக்கியுள்ளார்.

1280 "விளைந்த எழுத்தது விந்துவும் நாதமும்
விளைந்த எழுத்தது சக்கரமாக
விளைந்த எழுத்தவை மெய்யினில் நிற்கும்
விளைந்த எழுத்தவை மந்திரமாமே."

மேற்கூறின் திருமந்திரங்களிலிருந்து எமது உடம்புள் இயங்கும் ஐந்தெழுத்து ஆத்மசக்கரத்துள் விந்துவும் நாதமுமான சிவனும் சத்தியும் இருப்பது தெளிவாகிறது. யேசு கிறீஸ்து நாதரும் (Kingdom of God is within you) இறைவனின் இராட்சியம் உனக்குள்ளே இருக்கிறது என்று கூறுகிறார். இறைவனின் இராட்சியம் உடம்புள் இருக்கிறது என்றால் இறைவனும் அங்கேயே இருக்கின்றானென்பது வெளிப்படை. திருமந்திரமும் சத்தி சிவன் விளையாட்டால் அதாவது நாத விந்துவின் கலையால் உயிராக்கி நிற்பதை கீழ் காணும் திருமந்திரம் கூறுகிறது.

492 "சத்தி சிவன் விளையாட்டால் உயிராக்கி
ஒத்த இருள் மாயக் கூட்டத்திடை ஊட்டி
சுத்தம தாகும் துரியம் பிரிவித்து
சித்தம் புகுந்து சிவமயமாக்குமே."

அகாரத்தில் நிற்கும் விந்துவாகிய சிவனும் அகார உகாரத்தில் நிற்கும் நாதமாகிய சத்தியும் உடம்புள் ஆத்ம சக்கரத்துள் நிற்பதால் சிவலோகமும் சிவயோகமும் சிவபோகமும் தம்முள்ளே என்று திருமந்திரம் கூறுகின்றது.

129 "தூங்கிக் கண்டார் சிவலோகமும் தம்முளே
தூங்கிக் கண்டார் சிவயோகமும் தம்முளே
தூங்கிக் கண்டார் சிவபோகமும் தம்முளே
தூங்கிக் கண்டார் நிலை சொல்வது எவ்வாறே."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐந்தெழுத்தாய் பிரிக்கப்பட்ட ஆத்ம சக்கரத்தின் முதலெழுத்தான அகார எழுத்தை இருப்பிடமாய் வீடாய்க் கொண்ட சிவன் முன்றாங் கண்ணில் உகாரம் ஒளியாய் நின்று சத்தியாக நிற்கும் ஆத்மாவை காதலித்து நின்ற போதிலும் மனிதர் அதை உணராமல் அழிக்கின்றனரென்று திருமந்திரம் கூறுகிறது.

12 "கண்ணுதலான் ஒரு காதலன் நிற்கவும்
எண்ணிலி மாந்தர் இறந்தாரெனப்பலர்
மண்ணுறுவார்களும் ஊனுறுவார்களும்
அண்ணல் இவனென்று அறியகில்லார்களே."

அகார உகார எழுத்துக்களில் இயங்கும் ஆத்மாவை பெண்ணாகவும் அவளை அகாரத்தில் வசிக்கும் ஒருவன் காதலிக்கும் கன்னியாகவும் திருமந்திரம் விளக்குகின்றது.

1161 "ஆலிக்கும் கன்னி அருமை மனோன்மணி
பாலித்து உலகிற் பரந்து பெண்ணாகும்
வேலைத் தலைவியை வேத முதலவியைப்
பாலித்து ஒருவன் உகந்து நின்றானே."

திருவெம்பாவைப் பாடல்கள் இந்தப்பாங்கில் அமைந்திருக்கின்றது. கருவில் மிதித்த கமலப் பாதமாகிய அகாரத்தில் ஆதியும் அந்தமுமில்லா அருட்பெருஞ் சோதியான சிவன் நின்று தச நாதத்தை ஒலித்து சத்தியாக நிற்கும் உகாரத்தை ஆத்மாவை தட்டி எழுப்பி தனது அழகான தோற்றத்தையும் தனது பல்வேறு விசித்திரமான ஆற்றல்களையும் கூறி தன்னைச் சேர்ந்து புணரும்படி அமைக்கின்றான். ஆனால் அவளோ சிறிதும் செவிசாய்க்காமல் உடல் உணர்ச்சியைத் தூண்டும் ஐம்புலன்கள் வழிசென்று இறுதியில் துன்பத்தை அனுபவிக்கின்றது.

அகாரத்தில் உறைந்து அனைத்துமாய் நிற்கும் சிவனையும் உகாரத்தில் உயிராக இயங்கும் சத்தியையும் அறிந்தால், அத்தோற்றமே இலிங்கம்.

1753 "அகார முதலாய் அனைத்துமாய் நிற்கும்
உகார முதலாய் உயிர்ப்பு எய்தி நிற்கும்
அகாரம் உகாரம் இரண்டும் அறியில்
அகாரம் உகாரம் இலிங்க மதாமே."

உயிராய் நிற்கும் சத்தியே பிராணாயாமம் மூலம் சாதனை செய்து முத்தி நிலையை அளிப்பவள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1199 “சத்தியென்பாள் ஒருசாதகப் பெண்பிள்ளை
முத்திக்கு நாயகி என்பது அறிகிலர்
பத்தியைப் பாழில் உகுத்த அப்பாவிகள்
கத்திய நாய் போல் கதறுகின்றாரே.”

முத்தியென்பது ஆத்மாவும் இறைவனும் இரண்டறக்கலந்து நிற்கும் நிலை. இதை ஆதியோடு சமமான சமாதி நிலையென்றும் கூறுவர். ஆத்ம வஸ்துவாகிய சத்தியில் மனத்தைப் பதித்து மெய்யன்புடன் பத்தி செய்து இந்நிலையை அடைவார்கள். பாவத்தில் அழுந்தும் மனிதர்கள் மெய்பொருளான சத்தியில் பத்தி செலுத்தாமல் வெறும் பாழில் செலுத்தி நாய்களைப போல் ஊழையிடுகின்றார்கள்.

சமாதி நிலைபெறுவதற்கு கருவில் மிதித்த கமலப் பாதத்திலிருந்து வெளிப்படும் நாதமாகிய ஓசை ஒலியை பின்பற்றி வானுலக வீதிகள் ஊடாக சென்று மலர் பொழிந்த படுக்கை எய்து பேரின்பத்தை அனுபவிக்க தனக்கு தோழியாய் உடன் நிற்கின்ற சத்தி பேதமாகிய ஆத்மாவை அழைக்கின்றார். அவள் இந்தப்பரிசை பெற விருப்பம் அற்றவளாய் இருக்கிறாள். இது மனிதரின் சுபாவத்தை சித்தரிக்கின்றது. பின்வரும் திருமந்திரம் உணர்த்துகின்றது.

619 “விந்துவும் நாதமும் மேரு மருவில் ஓங்கிடில்
சந்தியிலான சமாதியிற் கூடிடும்
அந்தமில்லாத அறிவின் அரும்பொருள்
சுந்தரச் சோதியும் தோன்றிடுந் தானே.”

மாணிக்கவாசகர் சுவாமிகள் திருவெம்பாவைப் பாடல்களால் மனிதர் உலகில் அறிந்து உணர வேண்டிய அறிவைப் பெற்று இன்பமாக வாழத் தெரியாமல் துன்பத்தை அனுபவிக்கன்றதை கீழ் காணும் திருமந்திரம்.

2089 “இன்பத்துள்ளே பிறந்து இன்பத்துள்ளே வளர்ந்து
இன்பத்தினுள்ளே நினைக்கின்ற இது மறந்து
துன்பத்துள்ளே நின்று சோறொடும் கூறையென
துன்பத்துள்ளே நின்று தூங்குகின்றார்களே.”

இறைவனின் திருபாதமாகிய அகார எழுத்தை பூசை செய்யவும் நீராடச் செய்வதற்கும் பூவும் நீரும் உடம்புள்ளேயே உண்டு என்பதை பின்வரும் திருமந்திரங்கள் கூறுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1828 "புண்ணியம் செய்வார்க்கு பூவுண்டு நீருண்டு
அண்ணல் அது கண்டு அருள்புரியா நிற்கும்
எண்ணிலி பாவிகள் எம் இறை ஈசனை
நண்ண அறியாமல் நழுவுகின்றரே ."

நிர்வாணம் நிட்டை பரிபூரண நிலையென்றும் மெய்ப்பொருளாகிய ஆத்ம வஸ்துவோடு இயங்குவதே புண்ணியமென்று திருமந்திரம் பாடல்கள் கூறுகின்றது.

1640 "இலைதொட்டு பூ பறித்து என் தந்தைக்கென்று எண்ணி
மலர்தொட்டுக் கொண்டே வரும் புனல் காணேன்
தலைதொட்ட நூல் கண்டு தாழ்ந்து உள்ளம்
தலை தொட்டுக் கண்டேன் தவங்கண்ட வாறே."

576 "கூடமெடுத்து குடிபுக்க மங்கையர்
ஓடுவர் மீளுவர் பன்னிரண்டு அங்குலம்
நீடுவர் என் விரற் கண்டிப்பர் நால் விரற்
கூடிக் கொளிற் கோலம் அஞ்செழுத்தாமே."

கூடம் - உடம்பு, மங்கை - பராசத்தி, விரல் - அங்குலம்

765 "கூறும் பொருளிது அகார உகாரங்கள்
ஏறும் பொருளிது சிந்தையுள் நின்றிட
கூறும் அகாரம் குழல்வழி ஓடிட
மாறும் அமர்ந்திடும் அண்ணலுமாமே."

கூறும் பொருள் - ஓம் என்னும் இறை நாமத்தை ஓதும்பொருள், குழல் - சத்தி

1109 "அஞ்சொல் மொழியாள் அருந்தவப் பெண்பிள்ளை
செஞ்சொல் மடமொழி சீருடைச் சேயிழை
தஞ்சமென்று எண்ணித் தன் சேவடி போற்றுவார்க்கு
இன்சொல் அளிக்கும் இறைவி என்றாரே."

இன்சொல் - ஓமெனும் மந்திரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1152 "மெல்லிசைப்பாவை வியோமத்தின் மென்கொடி
பல்லிசைப் பாவை பயன்தருபைங்கொடி
புல்லிசைப் பாவையைப் போகத்துரந்திட்டு
வல்லிசைப் பாவை மனம் புகுந்தானே."

மெல்லிசைப் பாவை - உணர்வால் ஓமெனும், மெல்லிய நாதத்தை ஓதும் சத்தி, வல்லிசை - சகல வல்லமையுமுடைய ஆத்மாவின் மேற்பாதியானசத்தி.

1156 "தரித்து இருந்தாள் அவள் தன் ஒளிநோக்கி
விரித்து இருந்தாள் அவள் வேதப் பொருளைக்
குறித்து இருந்தாள் அவள் கூறிய ஐந்தும்
மறித்து இருந்தாள் அவள் மாது நல்லாளே."

தன் ஒளி - ஆத்ம சோதி, விரிந்து - எங்கும், பரவி வேதப் பொருள் ஆத்ம வஸ்து

1166 "கண்ணுடையாளைக் கலந்தங்கு இருந்தவர்
மண்ணுடையாரை மனிதரிற் கூட்டொணாப்
பண்ணுடையார்கள் பதைப்பற்று இருந்தவர்
விண்ணுடையார்களை மேலுறக் கண்டே."

கண்ணுடையாள் - நெற்றிக் கண்ணை உடையவாள், மண்ணுடையாள் - உலகத்தை நம்பி வாழ்பவர், பண் - ஓமெனும் நாதம்

1232 "வென்றிடலாமும் விதி வழி தன்னையும்
வென்னிடலாகும் வினைப்பெரும் பாசத்தை
வென்றிடலாகும் விழை புலன் தன்னையும்
வென்றிடும் மங்கை தன்மெய் உணர்வோர் தருக."

தன்மெய் - தன் ஆத்ம உணர்வு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1361 "தானே வெளியென எங்கும நிறைந்தவள்
தானே பரம வெளியது வானவள்
தானே சககலமும் ஆக்கி அழித்தவள்
தானே அனைத்துள் அண்டசகலமே."

தானே – ஐந்தெழுத்தில் இயங்கும் தானே, பரமவெளி – விண்வெளி.

1373 "உணர்ந்து இருந்து உள்ளே ஒருத்தியை நோக்கிற்
கலந்து இருந்து எங்குங் கருணை பொழியும்
மணந்தெழும் ஓசை ஒலியது காணும்
தணந்தெழு சக்கரந் தான் தருவாளே."

ஒருத்தி – சத்தி தணந்துதற் பரையாகத் தனித்துவோறாக.

1514 "இருட்டு அறை மூலை இருந்த குமரி
குருட்டுக் கிழவனைக் கூடக் குறித்துக்
குருட்டினை நீக்கிக் குணம்பல காட்டி
மருட்டி அவனை மணம் புரிந்தாளே."

இருட்டறை – உள்ளம், குருட்டுக் கிழவன் – அகாரத்தால் இருப்பவன்

1231 "அது இது என்று அவமே கழியாதே
இது விரி பூங்குழன் மங்கை நல்லானை
பதி மது மேவிப் பணிய வல்லார்க்கு
விதி வழி தன்னையும் வென்றிடலாமே."

அவமே – வீணாக, பதிமது – விந்து, நாதச்சறுக்கரமாகிய ஐந்தெழுத்து

***திருவெம்பாவையை இன்னும் விரிவாக விளக்கும் பல பாடல் களைக் கொண்ட ஆதிபராசத்தி என்னும் எமது மற்ற நூலைப் பார்க்கவும்.***

வணக்கம்
சி. இராமநாதன்
திருமூலர் சங்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமூலர் சங்க வெளியீடுகள்

1. திருமந்திர விளக்க மூலம்
இருதய நோயை தடுப்பது எப்படி?
2. முன்னேஸ்வர அன்னை வடிவாம்பிகை பாடல்
3. உடப்பூர் வடபத்திரகாளி பனுவல்
4. திருமந்திர அடிப்படையில் யோகர் சுவாமிகள் அறிவுரைகள்
5. அருள் நெறிக்கலசம் - 1, 2, 3
6. Selected Verses from Tirumantiram with English Translation.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org